(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்

nselva.com



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
4 சைவசமய பாடப்பரீட்சை - 2017
தரம் நான்கு



காலம் அளவு	45 நிமிடம்
புள்ளிகள் : 100	

இல.	12892
மாணவர் சுட்டெண் :	

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளம் இடுக.

1. உருவம் என்பது மூவகை திருமேனிகளில் ஒன்றாகும். ( )
2. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவேந்தர்கள் ஆவார். ( )
3. தான்தோன்றீஸ்வரர் ஆலயம் திருகோணமலையில் அமைந்துள்ளது. ( )
4. கண்ணன் இந்திரனின் கர்வத்தை அடக்கினார். ( )
5. பட்டர் திருவாரூரில் வாழ்ந்து வந்தார். ( )

(5 புள்ளிகள்)

2. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பிள்ளையார் பிடிப்பதற்கு உகந்த பொருள்

   1. குங்குமம் 2. திருநீறு 3. மணல்மண் 4. கோமயம்

2. பரமதத்தனின் மனைவியார் பெயர்

   1. யசோதை 2. திலகவதியார்
   3. புனிதவதியார் 4. அபிராமி

3. முருகப்பெருமான் மேல் பக்தி கொண்டவர்.

   1. பட்டர் 2. ஔவையார் 3. பாண்டியமன்னன் 4. சுந்தரர்

4. திருவாசகம் பாடியவர்

   1. திருஞான சம்பந்தர் 2. மாணிக்கவாசகர்
   3. திருநாவுக்கரசர் 4. அருணகிரிநாதர்

5. விபூதியை உடலெங்கும் தரித்திருப்பவர்.

   1. சிவபெருமான் 2. கண்ணன் 3. முருகன் 4. பிள்ளையார்

(5 புள்ளிகள்)

3. "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

"அ"		"ஆ"
1. மலையைக் குடையாகப் பிடித்தவர்	( )	1. திருக்குறிப்புத் தொண்டர்
2. சமய விழாக்களில் ஒன்று	( )	2. படைத்தல்
3. நகுலேஸ்வரம் அமைந்திருப்பது	( )	3. கண்ணன்
4. ஐந்தொழில்களில் ஒன்று	( )	4. நவராத்திரி
5. சிவனடியார் ஆடைகளைத் தோய்த்தவர்	( )	5. யாழ்ப்பாணம்

(5x2 = 10 புள்ளிகள்)

4. பொருத்தமான சொல்லைக் கூட்டினுள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டினுள் எழுதுக.

காலை பிரார்த்தனை	கௌசிகர்	தொண்டு	மங்கலச்	கந்தபுராணம்

1. கொக்கு ..... முனிவர் மீது எச்சமிட்டது.
2. நிறைகுடம் ..... சின்னமாகும்.
3. கச்சியப்பர் ..... பாடினார்.
4. பாடசாலையில் தினமும் ..... இடம் பெறும்.
5. கைம்மாறு எதையும் எதிர்பாராது செய்வது ..... ஆகும்.

(5x2 = 10 புள்ளிகள்)

5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் 3 தருக?

   .....

2. செல்வத்தை தருபவர் யார்?

   .....

3. கையிலே கனலை ஏந்தியவர் யார்?

   .....

4. நரகாசுரனை நினைவுபடுத்தும் பண்டிகை எது?

   .....

5. திருப்புகழை பாடியவர் யார்?

   .....

6. கண்ணனின் தாயார் பெயர் யாது?

   .....

7. "அன்பும் சிவமும் ஒன்று" எனக் கூறியவர் யார்?

   .....

(7x2 = 14 புள்ளிகள்)

6. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது என எழுதுக.

1. "திகடச் சங்கரச் செம்முகம் ஐந்துளான்" என்ற முதல் அடியை வைத்துப் பாடு"
   யாரால் ..... யாருக்கு .....

2. "பிரணவ மந்திரத்தின் விளக்கத்தை கூறுவாயாக?"
   யாரால் ..... யாருக்கு .....

3. "உனக்கு சுட்ட பழம் வேண்டுமா அல்லது சுடாத பழம் வேண்டுமா?"
   யாரால் ..... யாருக்கு .....

4. "என்னையும் கொக்கு என்று நினைத்தீர்களா?"
   யாரால் ..... யாருக்கு .....

(4x4 = 16 புள்ளிகள்)

7. பின்வருவன பற்றி ஐவைந்து வாக்கியங்கள் எழுதுக.

ஆலயத் தொண்டுகள்

.....

.....

.....

.....

.....

(5 x 2 = 10 புள்ளிகள்)

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

.....

.....

.....

.....

.....

(5 x 2 = 10 புள்ளிகள்)

8. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டை வரிக்கிரமமாக எழுதுக.

1. "தோடுடைய செவியன் ....." 2. "உருவாய் அருவாய் ....."

3. "பொன்னார் மேனியனே ....." 4. "ஆதியாய் நடுவுமாகி ....."

1. .....

.....

.....

.....

.....

(10 புள்ளிகள்)

2. .....

.....

.....

.....

.....

(10 புள்ளிகள்)